**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.132/2024
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : திருக்குமரன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day of January 2025.

08.01.2025

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். 25.02.2024ம் தேதி மாலை 06.30 மணியளவில் தேவர்குறிச்சியில் உள்ள முனியசாமி கோவில் அருகில் நான் இருந்தேன். அப்போது அரிராமிடம் 1ம் எதிரி ராஜேந்திரன், 2ம் எதிரி அஜித்குமார், 3ம்எதிரி பூமுருகன் மற்றும் 4ம் எதிரி வில்வகனி ஆகியோர் பிரச்சனை செய்து கொண்டிருந்தார்கள். அரிராமின் அண்ணான அ.சா.1 கார்த்திக்யிடம் தேவி என்பவர் போன் மூலம் தகவல் தெரிவித்தார்.

2) அ.சா.1 கார்த்திக் சம்பவ இடத்திற்கு வந்து 1ம் எதிரி ஏன் பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு 1ம் எதிரி ராஜேந்திரன் தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசினார். 1ம் எதிரி ராஜேந்திரனின் கையில் வைத்திருந்த கத்திகம்பை 2ம் எதிரி அஜித்குமார் வாங்கி அ.சா.1ன் கார்த்திக்கின் இடது பக்க தலையில் அடித்தார். 1ம் எதிரி ராஜேந்திரன், 3ம்எதிரி பூமுருகன் மற்றும் 4ம் எதிரி வில்வகனி ஆகியோர் பக்கத்தில் இருந்த கம்பை எடுத்து அ.சா.1 கார்த்திக்கை அடித்தார்கள். நான்

சண்டையை விலக்கிவிட்டேன். அப்போது 1 முதல் 4 எதிரிகள் அ.சா.1 கார்த்திக்கை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.132/2024
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : திருமுருகன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day of January 2025.

08.01.2025

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். 25.02.2024ம் தேதி மாலை 06.30 மணியளவில் தேவர்குறிச்சியில் உள்ள முனியசாமி கோவில் அருகில் நான் நின்றுகொண்டு இருந்தேன். அப்போது அரிராமுவிற்கும் 1ம் எதிரி ராஜேந்திரனுக்கும் இடையே சண்டை நடந்து கொண்டிருந்தது. அப்போது அ.சா.1 கார்த்திக் அங்கு வந்தார். அப்போது 2ம் எதிரி அஜித்குமார் அ.சா.1 கார்த்திகின் இடது தலையில் கத்திகம்பை வைத்து அடித்துவிட்டார். நான் சண்டையை விலக்கிவிட்டு அனுப்பி வைத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.132/2024
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : கார்த்திக் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day of January 2025.

08.01.2025

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஜெராக்ஸ் கடை வைத்து நடத்தி வருகிறேன். 25.02.2024ம் தேதி மாலை 06.30 மணியளவில் எனது கடையில் நான் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது எனது சித்தி மகள் தேவி எனக்கு போன் செய்து தேவர்குறிச்சியில் உள்ள முனியசாமி கோவில் அருகில் 1ம் எதிரி ராஜேந்திரன், 2ம் எதிரி அஜித்குமார், 3ம்எதிரி பூமுருகன் மற்றும் 4ம் எதிரி வில்வகனி ஆகியோர் எனது தம்பி அரிராமிடம் வாக்குவாதம் செய்து கொண்டிருப்பதாக கூறினார்.

2) எனது குடும்பத்திற்கும் 1ம் எதிரி ராஜேந்திரனின் மச்சானான பாண்டி என்பவரின் குடும்பத்திற்கும் சொத்து பிரச்சனை இருந்து வருகிறது. சொத்து தொடர்பாக மாண்பமை சார்பு நீதிமன்றம் முதுகுளத்தூரில் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. இதனால் எங்கள் இருகுடும்பத்திற்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்படும் என்று நினைத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு சென்றேன். அங்கு சென்று ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறீர்கள் பொறுமையாக இருங்கள் என்று கூறிக்கொண்டே செல்போனில் வீடியோ பதிவு செய்தேன்.

3) 1ம் எதிரி ராஜேந்திரன் கையில் வைத்திருந்த கத்திகம்பை 2ம்எதிரி அஜித்குமார் பிடிங்கி எனது இடது பக்க தலையில் அடித்துவிட்டார். மற்ற 1ம் எதிரி ராஜேந்திரன், 3ம்எதிரி பூமுருகன் மற்றும் 4ம் எதிரி வில்வகனி ஆகியோர் கம்பை எடுத்து என்னை அடித்து, ஏன்டா தேவிடியா மகனே இந்த இடம் உனக்கு வேண்டுமா என்று கூறினார்கள். அதில் எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது.

4) பக்கத்தில் இருந்தவர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள். அப்போது 1 முதல் 4 எதிரிகள் என்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். நான் உடனே முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். நான் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.